முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.5.2023) டோக்கியோவில் நடைபெற்ற ஜப்பான் நாட்டின் முக்கிய நிறுவனங்களின் தலைவர்களுடனான மதிய உணவு சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாடினார். இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, EHIME PREFECTURE துணை ஆளுநர் ஹிடிகி தனாகா (HIDEKI TANAKA), தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டு துணைத் தூதர் மாசாயுகி டகா (MASAYUKI TAGA) மற்றும் ஜப்பான் நாட்டு நிறுவனங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் - டோக்கியோவில்

6 நிறுவனங்களுடன் ரூ.818.90 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்!

டோக்கியோ, மே 31-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஜப்பான் நாட்டைச் சார்ந்த ஆறு நிறுவனங் களுடன் ரூ.818.90 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திடவும், தமிழ் நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளார். 23.5.2023 அன்று சிங்கப்பூர் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தனது இரண்டு நாள் சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு தற்போது ஜப்பானில் அரசு முறை பயணம் மேற்கொண்டு வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் (29.5.2023) காலை டோக்கியோவில், ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புடன் (Japan External Trade Organization - JETRO) இணைந்து நடத்தப்பட்ட மாபெரும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, ஜப்பான் நிறுவனங்கள் தமிழ் நாட்டில் அதிக அளவில் முதலீடு செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும் கேட்டு அழைப்பு விடுத்தார்.

அதனைத் தொடர்ந்து நேற்று மாலை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஜப்பான் நாட்டைச் சார்ந்த ஆறு தொழில் நிறுவனங்களுடன் புரிந்து ணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் விவரங்கள்:

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், கியோகுட்டோ சாட்ராக் (KyoKuto Satrac) நிறுவனத்திற்கும் இடையே, காஞ்சிபுரம் மாவட்டம், மாம்பாக்கத்தில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் 13 ஏக்கர் நிலப் பரப்பில், 113 கோடியே 90 இலட்சம் ரூபாய் முதலீட்டில் டிரக் வாகனங்களுக்கான பாகங்கள் உற்பத்தி செய்வதற்கான புதிய ஆலை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், மிட்சுபா (Mitsuba) நிறுவனத்திற்கும் இடையே, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்பூங்காவில் அமைந்துள்ள நான்கு மற்றும் இரண்டு சக்கர வாகனங்களுக்கான உதிரி பாகங்களை தயாரிக்கும் மிட்சுபா இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவன தொழிற்சாலையை 155 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், ஷிமிசு (Shimizu Corporation) நிறுவனத்திற்கும் இடையே, கட்டுமானம், கட்டுமான பொறியியல் மற்றும் அதன் தொடர்புடைய வணிகத்தை தமிழ்நாட்டில் மேற்கொள்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், கோயீ (Kohyei) நிறுவனத்திற்கும் இடையே, 200 கோடி ரூபாய் முதலீட்டில், பாலிகார்பனேட் தாள் தயாரித்தல், கூரை அமைப்புகள் தயாரித்தல், கட்டுமானத் துறையில் பயன்படுத்த எலக்ட்ரானிக் கூறுகளுக்கான எக்ஸ்ட்ருஷன் லைன்கள் (extrusion lines for electronic components for use in construction industry) ஆகியவற்றை தயாரிப்பதற்கான தொழிற்சாலை நிறுவுவதற் காக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், சடோஷோஜி மெட்டல் வர்க்ஸ் (SatoShoji Metal Works) நிறுவனத்திற்கும் இடையே, 200 கோடி ரூபாய் முதலீட்டில் விண்வெளி, பாதுகாப்பு மற்றும் கட்டுமான உபகரணங்கள் துறையில் பயன்படுத்தப்படும் உயர்தர எஃகு பாகங்கள் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலையை நிறுவுவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், டஃப்ல் (Tofle) நிறுவனத்திற்கும் இடையே, 150 கோடி ரூபாய் முதலீட்டில் சோலார், எஃகு ஆலைகள், விண்வெளி மற்றும் குறைக்கடத்தி தொழில்களுக்கான துருப்பிடிக்காத எஃகு சிறப்பு நெகிழ்வான குழல்களை உற்பத்தி (stainless steel specialized flexible hoses) செய்வதற்கான தொழிற்சாலையை நிறுவுவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

என மொத்தம் 818.90 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, கியோகுட்டோ சாட்ராக் நிறுவனத்தின் தலைவர் சடோஷி ஒகோமோட்டோ (Mr. Satoshi Okamoto), மிட்சுபா இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் கோஜி மிசுனோ (Mr. Koji Mizuno), ஷிமிசு நிறுவனத்தின் துணை பொது மேலாளர் ஹிடோஷி இசாவா (Mr. Hitoshi Iizawa), துணை இயக்குநர் மட்சுனாகா கசுநோரி (Mr. Matsunaga Kazunori), பாலிஹோஸ் நிறுவனத்தின் கூட்டு நிறுவனங் களான கோயீ நிறுவனத்தின் தலைவர் யோஷிஹிகோ சுஷிஹாசி (Mr. Yoshihiko Tsuchihashi), சடோஷோஜி மெட்டல் வர்க்ஸ் நிறுவனத்தின் பிரிவு மேலாளர் அகினோ மியாசி (Mr. Akinao Miyauchi), டஃப்ல் நிறுவனத்தின் செயல் அலுவலர் யோச்சி ஓடா (Mr. Yoichi Oda), பாலிஹோஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஒய்.ஜெ. ஷபீர், இயக்குநர் ஹதிம் ஷபீர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல் பாடநூல் கழகக் கிடங்கில் பாடப் புத்தகங்கள் பள்ளிகளுக்கு அனுப்பும் பணியை ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் இ.பெரியசாமி, பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் லியோனி ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

கம்பம் பகுதியில் காட்டுயானை தாக்கி பலியான

பால்ராஜ் குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் நிதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, மே 31-

தேனி மாவட்டம், கம்பம் பகுதியில் காட்டுயானை தாக்கி பலியான பால்ராஜ் குடும்பத்திற்கு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அக்குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் நிதி வழங்கவும் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு:-

தேனி மாவட்டம், கம்பம் பகுதியில் கடந்த 27.5.2023 அன்று இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த பால்ராஜ் என்பவர் அரிக்கொம்பன் என்ற காட்டுயானையை எதிர்பாராதவிதமாக பார்த்ததில் அதிர்ச்சியடைந்து கீழே விழுந்து சிகிச்சைக்காக தேனி மாவட்டம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு சிறப்பான சிகிச்சையளிக்கப்பட்ட போதும் அதற்கு பலனின்றி நேற்று (30.5.2023) அவர் உயிரிழந்தார் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த பால்ராஜ் அவர்களின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும் இந்த அரிக்கொம்பன் என்ற காட்டு யானையைப் பிடிப்பதற்கு தமிழ்நாடு அரசின் வனத்துறை அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இதற்கென மூத்த அனுபவம்வாய்ந்த வன அலுவலர்களைக் கொண்ட ஒரு சிறப்புக் குழு திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகத்தின் கள இயக்குநரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கால்நடை மருத்துவர்களைக் கொண்ட ஒரு குழுவும், முதுமலை மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகம் மற்றும் உள்ளூர் வனப் பகுதியைச் சார்ந்த 16 யானைத்தட கண்காணிப்புக் காவலர்கள் இந்த அரிக்கொம்பன் என்ற காட்டுயானையின் நடமாட்டத்தை கண்காணித்து அந்த யானையை பத்திரமாக வனப் பகுதிக்கு அனுப்ப நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். இதற்கென ஒரு தனி கட்டுப்பாட்டு அறையும் கம்பம் வனச் சரக அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர, பிறபகுதியினைச் சார்ந்த 200 வனத்துறை அலுவலர்கள் அப்பகுதி மக்களின் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

தேனி மாவட்ட ஆட்சியரும் அங்குள்ள நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து தேவையான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

நெல்லித்தோப்பு தொகுதி தி.மு.க. சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா ஆலோசனைக் கூட்டம்!

இரா.சிவா - முன்னணியினர் பங்கேற்பு!

புதுவை, மே 31-

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி, நெல்லித்தோப்பு தொகுதி தி.மு.க. கழகச் செயல்வீரர்கள் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் லெனின் வீதியில் உள்ள கீர்த்தி மஹாலில் நடந்தது.

தொகுதி அவைத் தலைவர் கே.பாலுகணேசன் தலைமை தாங்கினார். பொதுக்குழு உறுப்பினர் வே.கார்த்திகேயன் முன்னிலை வகித்தார்.

தொகுதி கழகச் செயலாளர் செ.நடராஜன், பொதுக்குழு உறுப்பினர் பெ. வேலவன், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் அகஸ்டின் சித்து ஆகியோர் வரவேற்று பேசினர்.

மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா, துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டு, தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா ஆண்டு முழுவதும் கொண்டாடுவது குறித்து ஆலோசனை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், தலைமைச்செயற்குழு உறுப்பினர் ஆர். வி. ஜே. சரவணன், தொ.மு.ச. அண்ணா அடைக்கலம், தொகுதி துணைச் செயலாளர்கள் கிருபாசங்கர், பெல்மோ தமிழ்மணி, சங்கீதா, மாநில பிரதிநிதிகள் சந்திரசேகர், முருகன், மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் கண்ணன், தகவல் தொழில்நுட்ப அணி அருண், கருணாகரன், அர்ச்சுணன், பக்கிரி, ரகோத்தமன், சோமு, சின்னக்கண்ணு, செல்வம், அரிகரன், சங்கர், ஏழுமலை, ஸ்டீபன், முத்து, சக்திவேலு, தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

சூன் 3- அன்று "ஊர்கள் தோறும் தி.மு.க." எனும் தலைப்பில், நெல்லித்தோப்பு தொகுதியில் உள்ள அனைத்து கிளைக் கழகங்கள் தோறும் கழகக் கொடியேற்றி வைத்தும், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை வைத்தும், மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செய்து, அன்னதானம் வழங்குவது.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, நெல்லித்தோப்பு தொகுதி கழகம் சார்பில், ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்துவது.

சூன் 3 அன்று வடசென்னையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா பொதுக் கூட்டத்தில் நமது நெல்லித் தோப்பு தொகுதி கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிப்பது.

சூன் 20ஆம் நாள் திருவாரூரில் எழிலுற அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கோட்டத்தின் திறப்பு விழாவில், புதுச்சேரி மாநில கழகத்துடன், நமது நெல்லித் தோப்பு தொகுதி கழகமும் இணைந்து பெருந்திரளாக பங்கேற்பது.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் புகழைப் பரப்பும் வகையில் பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களைக் கொண்டு நெல்லித்தோப்பு தொகுதியில் "என்றென்றும் கலைஞர்" எனும் தலைப்பில், கருத்தரங்கம் நடத்துவது.

நெல்லித்தோப்பு தொகுதியில் கட்டப்பட்டு வரும் தொகுதி கழக அலுவலகத்தை விரைவில் கட்டி முடித்து இந்த நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களால் திறப்பது என்றும் இக்கூட்டம் தீர்மானம் இயற்றுகிறது.

- *நெல்லித்தோப்பு தொகுதி முழுவதும் உள்ள தெருக்களில் பல்வேறு துறைகள் மூலம் தோண்டப்பட்ட சாலைகள் செப்பனிடப்படாமல் குண்டும், குழியுமாக உள்ளதை கண்டித்து வீடுகள் தோறும் கருப்புக் கொடி ஏற்றி வைத்து தங்கள் எதிர்ப்பை பதிவு செய்வதுடன், புதுச்சேரி நகராட்சி முன்பு போராட்டம் நடத்துவது என இக்கூட்டம் முடிவு செய்கிறது.*
- *நெல்லித்தோப்பு தொகுதியில் விநியோகிக்கப்படும் குடிநீர் உப்பு கலந்ததாகவும், குடிப்பதற்கு உகந்ததாகவும் இல்லாததை கண்டித்தும், இன்னும் ஒரு மாதக் காலத்திற்குள் சுகாதாரமான குடிநீர் விநியோகம் செய்யவில்லையெனில், நெல்லித்தோப்பு தொகுதி தி.மு.க. சார்பில், பொதுப் பணித்துறை அலுவலகம் முன்பு ஒரு நாள் அடையாள உண்ணா விரதம் இருப்பது என்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.*

கூட்ட முடிவில், தொகுதி கழகப் பொருளாளர் ஆர். வீ. ஜே. சந்திரேஷ்குமார் நன்றி கூறினார்.

போக்குவரத்து தொழிலாளர்களின் கோரிக்கை பேசி தீர்க்கப்படும்!

போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் பேட்டி!

அரியலூர், மே 31 -

அரியலூரில் தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவது புதிய உறுப்பினர் சேர்க்கையை விரைவு படுத்துவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டது. கூட்டத்தில் மாநில மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் சென்னையில் போக்குவரத்து தொழிற்சங்கங்கள் ஒற்றை கோரிக்கையை வலியுறுத்தி திடீர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முதல்வர் ஜப்பானில் இருந்தாலும் உடனடியாக என்னை அழைத்து போராட்டத்தை நிறுத்த அறிவுறுத்தினார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தொடர்பு கொண்டு தகவல் சொன்ன காரணத்தினால் தொழிற்சங்க தலைவருடன் பேசினேன் அவர்கள் வைக்கக் கூடிய கோரிக்கைகள் குறித்து நேரடியாக பேசி முடிவெடுக்கலாம் என கூறினேன்.

அதன் அடிப்படையில் தொழிலாளர்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றுக் கொண்டு உடனடியாக பேருந்துகளை இயக்க தொழிற்சங்க நிர்வாகிகள் ஒப்புக்கொண்டு தற்போது அனைத்து பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் தங்களுடைய இருப்பிடங்களுக்கு செல்வதற்கு பேருந்துகள் போதுமான அளவில் இயக்கப்பட்டு வருகிறது.

பள்ளி மாணவர்களுக்கான இலவச பஸ் பாஸ் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

குறுகிய காலத்தில் பஸ் பாஸ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

பள்ளிகள் மற்றும் கல்லூரி நேரங்களில் கூடுதல் பேருந்துகளை இயக்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் ஆறாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை அரசு பள்ளிகளின் பயிலும் மாணவர்களுக்கு ஆயிரம் மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தின் காரணமாக தற்போது அரசு பள்ளிகளில் சேர்க்கை அதிகரித்துள்ளது.

மேலும் இதனை கருத்தில் கொண்டு பள்ளி கல்வித்துறையுடன் போக்குவரத்து துறை அதிகாரிகள் கலந்து ஆலோசனை செய்து அவர்களுக்கு பள்ளி நேரங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கூறினார்.

சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் கல்லல் மேற்கு ஒன்றிய செயலாளர் குன்னக்குடி சுப்பிரமணியன் - லதா மகள் சு.கிருஷ்ணவேணி தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீர்காழி பெருமங்கலம் இராம.இளங்கோவன் - இ.ராதிகா மகன் இள.பவித்ரன் ஆகியோரது திருமணத்தை கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் நடத்திவைத்தார். கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்ற விழாவில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, மா.சுப்பிரமணியன், சிவ.வீ.மெய்யநாதன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

கவிஞர் தமிழ்தாசன் தலைமை!

கழகத் தீர்மானக்குழு நிர்வாகிகள் கூட்டம்!

தீர்மானக்குழுச் செயலாளர்கள் அறிவிப்பு!

தி.மு.க. தீர்மானக்குழு நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 02.06.2023 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில், கழக தீர்மானக்குழுத் தலைவர் **கவிஞர் தமிழ்தாசன்** அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தீர்மானக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- 1. தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா
2. கழக ஆக்கப் பணிகள் - குறித்து.

மீ.அ.வைத்தியலிங்கம்
கீரை எம்.எஸ்.விஸ்வநாதன்
அக்ரி கே.பி.டி.கணேசன்
செயலாளர்கள்,
தி.மு.க. தீர்மானக்குழு

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 30.05.2023